**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, கும்பகோணம்**

**முன்னிலை: திரு. S. பாலதண்டாயுதம், B.Sc., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.II, கும்பகோணம்**

**2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 08-ம் நாள் திங்கட்கிழமை**

**2055 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் வைகாசித்திங்கள் 25-ம் நாள்**

**பட்டியல் வழக்கு எண்.304/2025**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | C.C.No.304/2025 | | |
| 2) | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர், நாச்சியார்கோயில் காவல் நிலையம், குற்ற எண்.22/2025, U/sec.296(பி), 118(1), 351(3) and 49 of BNS. | | |
| 3) | எதிரிகளின் விபரம் | 1) தளபதி, த/பெ. சிவஞானம், ஸ்ரீரங்கராஜபுரம், மெயின் ரோடு, சாக்கோட்டை.<br>2) சரோஜா, க/பெ. சிவஞானம், அண்ணா நகர், ஸ்ரீரங்கராஜபுரம், சாக்கோட்டை, கும்பகோணம். | | |
| 4) | தேதி/நாள் : சம்பவம் | 13.01.2025 | | |
| 5) | முறையீடு | 14.01.2025 | | |
| 6) | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாள் | 1-ம் எதிரி 31.01.2025 முன் பிணை.<br>2-ம் எதிரி 14.01.2025 - 01.02.2025 | | |
| 7) | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 22.08.2025 | | |
| 8) | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 20.04.2026 | | |
| 9) | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல் வகை மனுக்களின் விவரம் | சட்டப்பிரிவு 348 பி.என்.எஸ்.எஸ்.-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு 29.05.26 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. | | |
| 10) | சாட்சிகள் விசாரணை | Witness | Date of Chief | Date of Cross |
| | | PW-1 | 14.05.2026 | 14.05.2026 |
| | | PW-2 | 26.05.2026 | 26.05.2026 |
| | | PW-3 | 26.05.2026 | 26.05.2026 |
| | | PW-4 | 26.05.2026 | 26.05.2026 |
| | | PW-5 | 29.05.2026 | 29.05.2026 |

| | | |
|---|---|---|
| 11) | பிரிவு 351(1)(b)BNSS–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 01.06.2026 |
| 1 2) | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம் | இல்லை. |
| 13) | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | இல்லை. |
| 14) | தண்டனை அல்லது உத்தரவு | இறுதியாக, சந்தேகத்தின் பலனை 1, 2 எதிரிகளுக்கு அளித்து, 1–ம் எதிரி மீதான சட்டபிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பி. என். எஸ்.–ன் கீழும், 2–ம் எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 49, 296(b), 118(1), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, 1, 2 எதிரிகளை பிரிவு 271(1) பி.என்.எஸ்.எஸ்.–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15) | காலதாமதத்தின் விளக்கம் | அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி. R. தேன்மொழி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சுரேஷ் குமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

### 1. குற்ற அறிக்கையின் சுருக்கம்.–

கடந்த 13.01.2025–ம் தேதி இரவு 09.30 மணியளவில் புகார்தாரர் பிரியதர்சன் திருப்பூரிலிருந்து பொங்கல் விடுமுறைக்கு வீட்டிற்கு வந்தவர் வீட்டிற்கு செல்வதற்காக சாக்கோட்டை பஸ் நிறுத்ததில் நின்று கொண்டு இருந்த போது அங்கு புகார்தாரரின் தாய்மாமா 1–ம் எதிரி புகார்தாரரை

பார்த்து எப்படா வந்த, ஏன்டா இங்க நிக்கிற நான் பழச எல்லாம் மறந்து விட்டேன், வீட்டிற்கு வாடா என்று கூப்பிட்டதற்கு புகார்தாரர் தான் வரவில்லை என்று மறுக்கவே பின்னர் புகார்தாரரை 1–ம் எதிரியின் வண்டியில் 1–ம் எதிரியின் வீட்டிற்கு வந்து அனைவரும் சாப்பிட்டுவிட்டு 13.01.2025–ம் தேதி இரவு 11.00 மணிக்கு 2–ம் எதிரியின் தூண்டுதலின் பேரில் புகார்தாரர் பிரியதர்சனை வீட்டில் தனியாக அழைத்துச்சென்று 1, 2 எதிரிகள் புகார்தாரரை பார்த்து டேய் குச்சிகாரி, தேவடியா மவனே என திட்டி, 1–ம் எதிரி புகார்தாரரிடம் தான் பழச எல்லாம் மறந்துட்டேன்னு நினைச்சியா உன்னாலும், உன் அம்மாவாலும் தான்டா நான் ஜெயிலுக்கு போனேனு திட்டி, புகார்தாரரின் மண்டையை சுவற்றில் மோதி புகார்தாரரின் இடது கண் புருவத்தில் வீக்கத்தை ஏற்படுத்தியும், 2–ம் எதிரி என்னோட பையன இந்த நிலைமைக்கு ஆளாக்குனதே நீ தான்டா, உன்னை எல்லாம் சும்மா விட கூடாதுடா என்று திட்டி மிரட்டியதற்கு புகார்தாரர் வேண்டாம் என்று சொல்ல, 1–ம் எதிரி வீட்டிலிருந்த அரிவாளை எடுத்து வந்து புகார்தாரர் பிரியதர்சனை கழுத்தில் வெட்டவே அந்த வெட்டு புகார்தாரரின் இடது பக்க தாடையில் பட்டு சொற்ப காயத்தை ஏற்படுத்திய போது அருவாளாலேயே வெட்டுடா, அப்பதான்டா எனக்கு நிம்மதியா இருக்கும் என்று திட்டி மிரட்டியும், 1–ம் எதிரியின் கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி புகார்தாரரை பார்த்து இன்னைக்கு நீ உயிரோடு தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்த 1, 2 எதிரிகளின் செய்கையானது 1–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பி.என்.எஸ்.–ன் படியும், 2–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 49, 296(பி), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழ் தண்டிக்கத் தக்க குற்றம் புரிந்துள்ளதாக நாச்சியார் கோயில் காவல் நிலைய காவல்

ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது 1–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பி.என்.எஸ்.–ன் படியும், 2–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 49, 296(பி), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு 1, 2 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப் பட்டது. 1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலனை செய்த போது 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் இவ்வழக்கின் 1–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழும், 2–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 49, 296(பி), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி வினவிய போது 1, 2 எதிரிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளி இல்லை என கூறினர். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப் பட்டது.

4. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

**5. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :–**

பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 எதிரிகளுக்கு எதிராக எவ்வித

சாட்சியமும் அளிக்காமல் அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2–ம் பிறழ் சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1, அ.சா.2, மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையில் அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான பட்டியல் சாட்சி 2, சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான பட்டியல் சாட்சி 4, மருத்துவ சாட்சிகளான பட்டியல் சாட்சி 7, 8 ஆகியோர் விலக்களிக்கப் பட்டுள்ளனர். கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட உதவி ஆய்வாளர் அ.சா.4 திரு. அசோக்குமார் அவரது சாட்சியத்தில் வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் திருமதி. சங்கவை மற்றும் உதவி ஆய்வாளர் திரு. வெங்கடேசன் ஆகியோர் பணி மாறுதல் பெற்று சென்று விட்டதால் அவர்களுக்கு பதிலாக தான் சாட்சியமளிப்பதற்கு நீதிமன்ற அனுமதியுடன் சட்டப்பிரிவு 348 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிப்பதாக வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியமளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து 1, 2 எதிரிகளை பாதிக்கக் கூடிய அம்சங்கள் குறித்து 1, 2 எதிரிகளிடம் பிரிவு 351(1)(b)BNSS–ன் படி வினவிய போது 1, 2 எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தனர். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

<u>7. **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.–**</u>

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் 1–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழும், 2–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 49, 296(பி), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

8. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அரசுத் தரப்பில் 1 முதல் 5 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற் கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 ஆகியோர் எதிரிகளுக்கு எதிராக எந்த வித சாட்சியமும் அளிக்காமல் அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளனர். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே சந்தேகத்தின் பலனை 1, 2 எதிரிகளுக்கு அளித்து 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சியான **அ.சா.1 பிரியதர்சன்** அவரது முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களில் 1–வது எதிரி எனது மாமா. 2–வது எதிரி எனது பாட்டி. கடந்த 2025–ம் வருடம் தேதி நினைவில்லை இரவு 07.00

மணியளவில் நான் ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு சென்றிருந்த போது அங்கு தெருவில் ஒரே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்த போது கூட்டத்தில் யாரோ என்னை அருவாளால் வெட்டிவிட்டு ஓடி விட்டார்கள். கூட்டமாக இருந்ததால் என்னை வெட்டியது யார் என்று தெரியவில்லை. காயம்பட்ட என்னை யாரோ சிகிச்சைக்காக கும்பகோணம், அரசு மருத்துவ மனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது நாச்சியார்கோவில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப் படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என அரசுத் தரப்பு வழக்குக்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1—ன் சாட்சியத்தில் இருந்து அ.சா.1—ம் எதிரிகளும் நெருங்கிய உறவினர்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் அ.சா.1 அவரது புகார் வாக்குமூலத்தில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு எதிரிகள் தன்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், 1—ம் எதிரி அ.சா.1—ன் மண்டையை சுவற்றில் மோதியதில் அ.சா.1—க்கு இடது கண் புருவத்தில் வீக்கம் ஏற்பட்டது என்றும், 1—ம் எதிரி அவர் வீட்டிலிருந்த அரிவாளை எடுத்து வந்து தன்னை கழுத்தில் வெட்ட வந்த போது நான் திரும்பி விடவே அந்த வெட்டு தனது இடது பக்க தாடையில் பட்டு ரத்தக் காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் சத்தம் கேட்டு அங்கு வந்த தன் மற்றொரு மாமா பிரசாந்த், 1—ம் எதிரியிடமிருந்து தன்னை காப்பாற்றி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், எதிரிகள் அ.சா.1—யை கொலை மிரட்டல் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் புகார் வாக்குமூலத்திற்கு மாறாக சாட்சியமளித்துள்ளது தெரிய வருகிறது.

11. சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான பட்டியல் சாட்சி 3 இளவரசன் அ.சா.2–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். **அ.சா.2 இளவரசன்** அவரது முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் எதுவும் கேள்விப்படவில்லை என போலீசாரின் வாக்கு மூலத்திற்கு மாறாக பிறழ் சாட்சியமளித்துள்ளார். மேலும் சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 அவரது முதல் விசாரணையில் எதிரிகளுக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1, சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 ஆகியோர் போலீசாரின் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு மாறாக நீதிமன்றத்தில் பிறழ் சாட்சியமளித்து உள்ளனர்.

12. பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள **அ.சா.3 குணசீலன்** தனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக நான் இரவு 08.00 மணியளவில் சாக்கோட்டை கடைத்தெருவில் நின்று கொண்டிருந்த போது அங்கிருந்த போலீசார் தன்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். தற்பொழுது தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1–வது கையொப்பம் தன் உடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2, போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

13. மற்றொரு பார்வை மகசர் சாட்சியான **அ.சா.4 விக்கி** தனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக நான் இரவு 08.00 மணியளவில் சாக்கோட்டை கடை தெருவில் நின்று கொண்டிருந்த போது அங்கிருந்த போலீசார் தன்னிடம்

சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். தற்பொழுது தன்னிடம் காண்பிக்கப் படும் பார்வை மகசரில் உள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3, போலீசார் தன்னை விசாரிக்க வில்லை என பிறழ் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2 மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையில் மற்ற சாட்சிகளான சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான பட்டியல் சாட்சி 2, சம்பவத்தை கேள்விப்பட்ட பட்டியல் சாட்சி 4, மருத்துவ சாட்சிகளான பட்டியல் சாட்சி 7, 8 ஆகியோரை விசாரிக்க அரசுத்தரப்பில் விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட முரண்பட்ட காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்கேதத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த வழக்கின் அ.சா.1 புகார் வாக்குமூலத்திலும், குற்ற இறுதி அறிக்கையிலும் 1–ம் எதிரி அரிவாளால் அ.சா.1.–யை தாக்கப் பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வழக்கின் தடயப் பொருளை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. புலன் விசாரணை சம்மந்தமாக இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5–ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்ய இயலாது.

14. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றா வணங்கள் படியாக 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற் கிடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இறுதியாக, சந்தேகத்தின் பலனை 1, 2 எதிரிகளுக்கு அளித்து, 1–ம் எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழும், 2–ம் எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 49, 296(பி), 351(3) பி.என்.எஸ்.–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, 1, 2 எதிரிகளை பிரிவு271(1)பி. என்.எஸ்.எஸ்.–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

16. இவ்வழக்கில் தடயப்பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப் படவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 08–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

BALADHANDAYUTHAM Digitally signed by BALADHANDAYUTHAM
Date: 2026.06.09 13:50:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
கும்பகோணம்.

**இணைப்பு:–**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பிரியதர்சன். |
| அ.சா.2 | திரு. இளவரசன். |
| அ.சா.3 | திரு. குணசீலன். |
| அ.சா.4 | திரு. விக்கி. |
| அ.சா.5 | திரு. அசோக்குமார், (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:–**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | குறியீடு செய்த சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | -- | பார்வை மகசரில் உள்ள அ.சா.2–ன் 1–வது கையொப்பம். | அ.சா.2 |
| அ.சா.ஆ.2 | -- | பார்வை மகசரில் உள்ள அ.சா.3–ன் 2–வது கையொப்பம். | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 14.01.2025 | புகார் வாக்குமூலம். | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 14.01.2025 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 14.01.2025 | பார்வை மகசர். | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | 14.01.2025 | மாதிரி வரைபடம். | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 14.01.2025 | அ.சா.1–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.5 |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:– இல்லை.

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருள்**:– இல்லை.

BALADHANDAYUTHAM

Digitally signed by BALADHANDAYUTHAM
Date: 2026.06.09 13:50:41 +0530

நீதித்துறை நடுவர் எண்–II,
கும்பகோணம்.

**குறிப்பு: –**

1. வழக்கின் எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. இவ்வழக்கின் தீர்ப்பு முடிவு பற்றிய விவரம் காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. இத்தீர்ப்புரையின் நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இ) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.